"DINAMALAR"

PAGE NO: 04

DATE: 27.12.2021

# புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியருக்கு விருது

**புதுச்சேரி, டிச. 27–**

புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியருக்கு சிறந்த ஆராய்ச்சியாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் மின்னணுவியல் துறையில் இணைப் பேராசிரியராக பணிபுரிபவர் சண்முகானந்தம். ஆராய்ச்சியில் இவரது பங்களிப்புகளை அங்கீகரித்து, அமெரிக்க எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் பொறியாளர்கள் நிறுவனத்தின் (ஐ.இ.இ.இ.,) சென்னை பிரிவு சார்பில் 2021ம் ஆண்டிற்கான, சிறந்த ஆராய்ச்சியாளர் விருதினை வழங்கி உள்ளது.

சென்னை தனியார் ஓட்டலில் நடந்த விழாவில், ஐ.இ.இ.இ., தலைவர் டாக்டர் குமரப்பன், சண்முகானந்தத்திற்கு விருது வழங்கினார்.

விருது பெற்ற பேராசிரியர் சண்முகானந்தத்தை, பல்கலைக் கழக துணை வேந்தர் குர்மீத் சிங் வாழ்த்தினார்.

பேராசிரியர் சணமுகானந்தம், கடந்த ஆண்டு இங்கிலாந்தின் சர்வதேச ஆராய்ச்சியாளர் விருது பெற்றுள்ளார்.



■ சிறந்த ஆராய்ச்சியாளர் விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் சண்முகானந்தத்தை, துணை வேந்தர் குர்மீத் சிங் வாழ்த்தினார்.